Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 16-11-66 இதழ் 267

பராபவ ஆண்டு ஜமாதுல் றஜப் 22 ஐப்பசி 2 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

## வேப்பு தரும் போதை

தம்பிலுவில், சனி

அக்கரைப்பற்று தம்பிலுவில் கிராமசபை எல்லைக்குள் உள்ள பெரிய வேப்பமரம் ஒன்றில் 'பால்' சுரந்து கொண்டிருக்கிறது. இந்த "பாலை" குடித்தவர்கள் மதுவுண்ட வண்டினைப் போல் மயங்கிக் கிடக்கிறார்கள்.

இந்த மரத்தில் பாலைப் போன்ற நீர்த்தன்மை வடிவதைக் கண்ட சிலர் அச்சப்பட்டு இலேசாக ருசித்துப் பார்த்தனர். என்றும் ருசி இனிப்பாக இருந்ததைக் கண்டு குடித்துக்கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட சபைகள்: முழுவிபரம் கோருக

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிர்க்கட்சியினர் யோசனை

கொழும்பு, சனி

மாவட்டசபை மசோதா வெறும் மசோதா அல்ல உள்ளூராட்சிமன்றங்களுக்கான புதியஅமைப்பு விதிகளைக்கொண்டதுதான் அது, எனவே மாவட்டசபைகள் மசோதாவைக் கொண்டு வருமுன் உள்ளூராட்சிமன்றங்களுடன் அதுபற்றிக் கலந்தாலோசனை செய்து, அவைகளின் கருத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்துவதுடன் மாவட்டசபை மசோதாவின் முழு விபரங்களையும் முதலில் வெளியிடவேண்டுமென்று கோரி தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்."

இந்தயோசனையை எதிர்க்கட்சிப் பார்லிமெண்டரிக்குழு நாடு முழுவதிலுமுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மாவட்ட சபைகள் மசோதா உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய அமைப்பு முறைகளாகத் தோன்றுகிறதென்றும் உள்ளூராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட இவ் விஷயத்தில் உள்ளூராட்சி மன்றங்களைக் கலந்தாலோசித்தே முடிவுசெய்யவேண்டுமென்றும் இதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்றும் எதிர்க்கட்சியினர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனராம்.

மாவட்டசபைகள் மசோதா கொண்டுவரப்படுமுன் அதைவெளியிடுமாறு உள்ளூராட்சிஅமைச்சரை வற்புறுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பும்படியும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

இதேசமயம் சர்ச்சைக்குரிய மசோதாக்களை இப்போதைக்கு கொண்டுவரக்கூடாதென்றும் அவை அரசாங்கப் பார்லிமெண்டரிக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றபின்னரே கொண்டுவரப்பட வேண்டுமென்றும் ஆளும் கட்சி அங்கத்தவர்கள் பலர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் மந்திரி தகா கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி, ஞாயிறு

இம்மாதம் 10-ந் திகதி உத்தியோகபூர்வமாக உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அங்கு தங்கியிருக்கும் இரு தினங்களிலும் அவர் பின்வரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

10-ம் திகதி வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு விஷேசவிமானத்தில் பலாலி விமான நிலையத் தவந்தடைவார். அங்கு அவருக்கு உத்தியோகபூர்வமாக வரவேற்பளிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள இராசமாளிகைக்கு அழைத்து வரப்படுவார். காலை 10-00 மணிக்கு அரியாலையில் மின்சக்தி நெசவு நிலையத்தைத் திறந்துவைப்பார். 11-00 மணிக்கு நல்லூர் தெற்கு மூத்தநாயகர் நெசவு நிலையத்தைத் திறந்துவைப்பதோடு நல்லூர் தெற்கு உலோக வார்ப்பாளர்கள் நிலையத்துக்கும் விஜயம் செய்வார். 11-45 மணிக்கு சுன்னாகத்தில் திருவள்ளுவர் மகாசபையினர் கந்திரிகையைச் சந்திப்பார்கள். 12-30மணிக்கு தையிட்டி நெசவு நிலையத்துக்கு விஜயம்செய்வார். நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் நண்பகல் போசனமளிப்பார்

8 ம் பக்கம் பார்க்க

## அரசாங்கக்கட்சி குழுக்கூட்டம்

### காரசாரமான விவாதம் நடைபெறலாம்

கொழும்பு, சனி

நாளைக் காலையில் அரசாங்கக் கட்சியின் பார்லிமெண்டரிக் குழு கூடும் போது காரசாரமான விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குட்டித் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதல் கூட்டமாகையால் மிகமுக்கிய விஷயங்கள் பல இக்கூட்டத்தில் விவாதிக்கப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

பின்வரும் விஷயங்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்படக்கூடுமென்று தெரிகின்றது.

○ மாவட்டசபைகள்.

○ தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கான சலுகைகள் பற்றி திறைசேரி சுற்றறிக்கை.

○ கடந்த குட்டித்தேர்தலின் பெறுபேறுகள்.

இந்த விஷயங்கள் பற்றிய பிரேரணைகளை அங்கத்தவர்கள் நாளைக் காலையில் கொடுப்பார்களெனவு தெரிகின்றது.

எதிர்க்கட்சியினரின் பார்லிமெண்டரிக் குழுவும் நாளைக்காலையில் கூடி பெறவிருக்கின்றது.

## அரசாங்கஊழியருக்கு எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 5

அரசாங்க ஊழியர்கள் தேர்தலின்போது ஓர் அபேட்சகருக்கு தேர்தல் ஏஜண்டாக அல்லது வாக்குகள் எண்ணும் ஏஜண்டாகவோ வேலை செய்தால் அதற்குக் கடுமையான தண்டனை கொடுக்கப் படவேண்டும். அவர்களுக்கு 3 மாதங்களுக்குச் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்விதிக்கலாம்என்று மக்கள் பிரதிநிதிகள் திருத்தச்சட்டத்தைப் பரிசீலனை செய்த டில்லி சட்டசபை தெரிவுக்கமிட்டி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

## மாணவனுக்கு அபராதம்

திருநெல்வேலி, சனி

குப்பிழானைச்சேர்ந்த பதினேழுவயதுமாணவன் சட்டவிரோதமாக இரண்டுபோத்தல் சாராயத்தைச் சைக்கிளில் கொண்டுசென்றதாக யாழ்ப்பாணம் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் எதிரிக்கு 50 ரூபா தண்டம்விதித்தார்.

## பெற்றோர் அனுஷ்டிக்கும் சமயத்தில் போதனை

### கனிஷ்டபாடசாலை மாணவர்களுக்கு வசதி

கொழும்பு, சனி

கனிஷ்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தம் பெற்றோர் அனுஷ்டிக்கும் சமயபாடத்தில் அறிவுபெறுவதற்கு புதிய கல்வித்திட்டத்தின் கீழ் ஏற்பாடுசெய்யப்படவிருக்கின்றது.

பெற்றோரின் சமயத்தை பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் அதே சமயத்தை அனுஷ்டிப்பவராகவும் கல்வி மா அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்டவராகவும் இருப்பார்.

ஒரு மதத்தைச் சேர்ந்த பிள்ளைகள் 15 பேருக்குக் குறைவாக ஒரு கனிஷ்ட பாடசாலையில் இருப்பார்களானால் அவர்களின் மதக்கல்வி அவர்களுக்குப் போதிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படமாட்டாது. அத்துடன் ஒரு பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு மதக்கல்வி வேண்டாம் என அறிவித்தாலும் அந்தப் பிள்ளைகளுக்கு மதக் கல்வி போதிக்கப் படமாட்டாது.

கனிஷ்ட பாடசாலைகளில் பயின்று வெளியேறி உயர்தரக் கல்வி பெறவிரும்பும் மாணவர்களுக்கும் உதவுவதற்குப் புதிய கல்வித்திட்டத்தின்படி ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது. இராப் பாடசாலைகள், மாலை நேரப் பாடசாலைகளில் சேர்ந்து இவர்கள் படிக்கலாம். அப்பாடசாலைகள் தேசியக் கல்வித்திட்டத்தின்படி செயல்படுவதாயின் அவைகளுக்கு அரசாங்க மான்யத்திலிருந்து பணம்கொடுக்க வழி செய்யப்படும்.

ஈழமுத்து

## 'இலக்கிய கர்த்தாக்களுக்கு ஆதரவு அளியுங்கள்'

### உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இலக்கிய ஆக்கங்கள் நாட்டினரின் ஆதரவுப் பலத்தினாலேயே வளர்ச்சியடைகின்றன. பண்டைநாளில் இலக்கிய படைப்பாளிகளுக்கும் அரசர்கள் ஆதரவளித்துவந்தனர். இன்றுபொது ஸ்தாபனங்களும், மக்களுமே இலக்கிய கர்த்தாக்களை ஆதரித்து வளர்க்கக் கடமைப்பட்டுள்ளனர்"

வடபகுதி உள்ளூர் ஆட்சி ஆணையாளர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழத்து இலக்கிய சிருஷ்டியாளர்களை ஆதரித்து ஊக்குவிக்கவேண்டுமென்ற பெருநோக்குடன் அனுப்பப்பட்ட இவ்வறிக்கையில் மேலுந் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந் நாட்களில் உள்ளூராட்சி ஸ்தாபனங்களும், சனசமூக நிலையங்களும் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவவேண்டுவது அவசியமாகின்றது. வெளிநாட்டுப் புத்தகங்களை தருவிப்பதால் பெறுமதியுள்ள வெளிநாட்டுச் செலவணி விரயமாகிறது.

தற்பொழுது ஒவ்வொரு துறையிலும் ஈழத்தில் எழுதப்பட்டு, ஈழத்தில் அச்சேறும் புத்தகங்கள் தென் இந்தியாவில் அச்சிடப்படும் புத்தகங்களின் தரத்துடன் ஒப்பிடுகையில் சமநிலையுடையனவே.

உள்ளூராட்சி அதிகார சபைகளும், சனசமூக நிலையங்களும், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஈழத்து எழுத்தாளர் எழுதி வெளியிடும் புத்தகங்களின் இரண்டு பிரதிகளையாகுதல் வாங்கினாலே போதும், இங்குள்ள இத்தகைய சங்கங்கள் சபைகளின் எண்ணிக்கையைக் கணக்கிடின் 3000 பிரதிகளுக்குக் கூடவிற்பனையாகிவிடும். இதனால் இலக்கியக் கர்த்தாக்கள் ஊக்கம் பெறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**கோழிக்குஞ்சுகள்!**

கோழிக்குஞ்சுகள் இனம் பார்த்து வாங்குவோர்க்கு ஓர் நற்செய்தி. சேவல்கள் கொடுக்கப்படும். விலைப்பட்டியல் எழுதுங்கள் அனுப்பப்படும். விலைப்பட்டியல் பதிவுசெய்து ஒருமாசத்துக்குள் குஞ்சுகள் அனுப்பப்படும். அருணா ஏஜென்சிஸ். அளவெட்டி. 1466

## கல்வி

**வகுப்புகள்**

ஜே. எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்து ஜி.சி.ஈ. பரீட்சைக்குத் தோற்றுதவர்களுக்கும், தோற்றிச் சித்தியடையாதவர்களுக்கும் 1967 மார்கழி ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைவதற்கு சுருக்கெழுத்து, தட்டச்சு, வர்த்தகம், கணக்கியல், வர்த்தக கணிதம், பொருளாதாரம், தமிழ்ப் பாஷை, சமயம் 45 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் பிரத்தியேகமாய் கற்பிக்கப்படுகின்றன.

உடன் விண்ணப்பிக்கவும், வர்த்தகக் கல்லூரி ஸ்தாபிதம் 1924. பருத்தித்துறை வீதி, கரவெட்டி. 1475

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்தி விரைவில் அடங்கிய சுற்றவோர் இரும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் சபி பூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

**மருந்து கலக்குவோர்**

மருந்து கலக்குவோராகப் பயிற்சி அளித்து வேலைக்கமர்த்த மணமாகாத ஆண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். Dr. K. Pathmanathan, Parvathy House, சிவன்கோயிலடி. Pointpedro. 1477

## தேவாரபாராயண பூர்த்திவிழா

உடுப்பிட்டி, சனி

குருமூர்த்தி பிரம்மஸ்ரீ ஞா. சபாபதி தேசிகர் தலைமையில் கடந்த 17 ஆண்டுகளாக கரவெட்டி தச்சந்தோப்பு விநாயகராலயத்தில் வெள்ளிதோறும் நடைபெற்று வந்த தேவபாராயண பூர்த்திவிழா நேற்றுமாலை விநாயகருக்கு அபிஷேகமும், பூசையுடனும் நடைபெற்றது. பண்டிதர் ஞா. ஸ்ரீசபாபதி தேசிகருக்கு பிரமஸ்ரீ ஞ. பாலசுந்தரக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் உட்பட வேறு பலரும் பேசினர்.

## சாராய வேட்டை

சங்கானை, சனி

பதவி உயர்வுடன் சங்கானைப் பொலிசில் மீண்டும் நியமனம் பெற்றுள்ள இன்ஸ்பெக்டர் திரு. சி. டி. மென்டிஸ் இப்பகுதியில் 'சாராயவேட்டையில்' தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பண்டத்தரிப்பில் இரண்டு கடைகளில் பொலிஸ்கோஷ்டியுடன் திடீர் சோதனை செய்து பல சாராயப் போத்தல்களைக் கைப்பற்றினார்.

## சிங்களத்தைப் புரிய 8 மைல் நடந்தாராம்

மாவிட்டபுரம், சனி

தனக்குவந்த சிங்களக் கடிதம் ஒன்றினை வாசித்து புரிந்து கொள்ள ஒருவர் பல "பேக்கரி"களைத் தேடி போனார். கடைசியாக 8 மைல் தூரம் அலைந்து காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் வந்துதான் கடிதத்தில் என்ன எழுதப்பட்டு இருக்கிறது என்பதனை அறிந்தாராம்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. எம். பொன்னம்பலம் என்பவருக்குத்தான் இப்படி ஒரு கடிதம் கிடைத்தது. மாணவ ஆசிரியர் தேர்வு சமீபத்தில் நடந்த போது அதற்கு கடமையாற்றியதற்கான 'வவுச்சரை' அனுப்பும்படியே அக்கடிதத்தில் கூறப்பட்டு இருந்தது.

## 'மரண தண்டனையை ஒழிக்கவும்'

### கைதிகள் கோரிக்கை

கொழும்பு, சனி

மரண தண்டனையை முற்றாக ஒழித்து விட முயற்சிகள் எடுக்கும் படி, மரண தண்டனையை எதிர்பார்த்திருக்கும் 38 சிறைக் கைதிகள் வண. நாரத தேரோவைக் கோரியுள்ளனர்.

பிரிட்டிஷாரின் காலத்திலேயே மரண தண்டனை இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதென்றும், ஆனால் பிரிட்டன் பௌத்த நாடாக வல்லாத போதும், தற்போது அதுகூட மரண தண்டனையை நீக்கி விட்டதெனவும், பௌத்த நாடாகிய இலங்கையும் மரண தண்டனையை முற்றாக ஒழித்துவிட வேண்டுமெனவும் அக்கைதிகள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

வண. நாரத தேரோ கைதிகளின் கோரிக்கையை தாம் ஆதரிப்பதாகவும், மரண தண்டனையை ஒழிக்கத் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் கூறியுள்ளார்.

# விளம்பரம்

## நெல்லியடிப் பட்டினம்

### கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17-ந் திகதி முற்பகல் 11-30 மணிவரை கீழ்க்காணும் வேலைகளுக்கு, நெல்லியடிப் பட்டின விசேஷ ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தியதன் பேரில் 15-11 66 பிற்பகல் 3-00 மணி வரை, விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில், பணிபுரியும் நேரங்களில், அறிந்துகொள்ளலாம்.

சி. சி. மாணிக்கவாசகர்
விசேஷ ஆணையாளர்.

விசேஷ ஆணையாளர் அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி.
2-11-1966.

### வேலைகளின் விபரம்

1. அரசடிபுலவராவோடை ரோட்டுக்கு இரண்டாம் முறை தார் ஊற்றுதல்.
2. வண்ணான்துறை ஒழுங்கை ரோட்டுக்கு இரண்டாம் முறை தார் ஊற்றுதல்.
3. கொல்ல தெரு அமைத்தல்.
4. ஆலங்கட்டைச் சுடலை ரோட்டு திருத்திஅமைத்தல்.
5. மித்தில் ரோட்டின் பள்ளங்கள் நிரவுதல்.
6. இலகடி ஒழுங்கையின் குழாய் திருத்தி அமைத்தல்.
7. நெல்லியடி மத்திய நூல் நிலையக்காணிக்கு முள்ளுக்கம்பி அடித்து, கேற் போடுதல்.
8. ஆடு, மாடு அறுக்கும் மடுவம் அமைத்தல்.
9. நெல்லியடிச் சந்தையில் கடைகள் அமைத்தல். (இதற்கு கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-.)
10. 1-ம் வட்டாரத்தில் உள்ள 5 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
11. 2-ம் வட்டாரத்தில் உள்ள 5 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
12. 3-ம் வட்டாரத்தில் உள்ள 3 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
13. 4-ம் வட்டாரத்தில் உள்ள 7 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
14. 5-ம் வட்டாரத்தில் உள்ள 2 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
15. 6-ம் வட்டாரத்தில் உள்ள 2 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
16. 7-ம் வட்டாரத்தில் உள்ள 1 ஒழுங்கைகளின் பள்ளங்கள் நிரவுதல்.
17. வீதிப் பெயர்ப்பலகைகள் அமைத்தல்.
18. மித்தில் வாய்க்கால் ஆழமாக்குதல். 1364

## இலங்கை வரும் கைத்தொழில் திரைப்படங்கள்

லண்டன், நவ. 5

கைத்தொழில் முறைகளை விளக்கும் சினிமாப் படங்களை பிரிட்டனிடமிருந்து இலங்கை பெறவிருக்கிறது. கைத்தொழில் கல்வியைத் துரித பயிற்சி அளிப்பதில் இவை பெரிதும் உதவியாக இருக்கும்.

எலெக்ரோனிக்ஸ், பொறியியல், உலோக வடிவமைத்தல், அளவு மதிப்பீடு போன்ற துறைகளில் கையாளப்படும் நவீன முறைகளை இப்படங்கள் விளக்கிக் காட்டுகின்றன,

இந்தியா, நைஜீரியா, ஸாம்பியா போன்றவை உட்பட முன்னேற்றமடைந்துவரும் சில சாம்ராஜ்ய நாடுகளில் இந்தப் புதிய முறை ஏற்கனவே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்றும் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இப்படங்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அதிகாரி ஒருவர் கூறினார். "முன்னேறிவரும் நாடுகளில் கைத்தொழில் பயிற்சியளிப்பதற்கு இந்தப் புதியமுறை பெரிதும் உதவியாக இருக்கும்" என்றும் அவர் சொன்னார்,

## "ராஜினமா தேவை"

புதுடில்லி, நவ,5

"தேர்தலுக்கு 6 மாதத்திற்கு முன்பாக மந்திரிகள் ராஜினமாசெய்யவேண்டும். அப்போது தான் தேர்தல் சுயேச்சையாக நடைபெறும் என்று டில்லி சட்டசபையில் இரா. செழியன் வற்புறுத்தியுள்ளார்.

## நம்பிக்கை மோசடி வழக்கு

திருநெல்வேலி, ஞாயிறு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெனடிக் சபாரட்ணம் வி. கந்தசாமி, பி. கார்த்திகேசு, கே. சிவகுரு ஆகிய நால்வரும் புங்கங்குளம் ரோட்டைச்சேர்ந்த மாரிமுத்து செல்லையா என்பவரை நம்பிக்கைமோசடி செய்ததாக யாழ்ப்பாணம் பெலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. சி. ஜே. ராஜாரட்ணம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் நால்வரும் மாரிமுத்து செல்லையா என்பவருக்கு அறுநூறு துண்டு உலோகத்தகடுகளைக் கொடுத்து அவைகளைப் பவுணென்று சொல்லி ஆயிரத்துமுன்னூறு ரூபா வாங்கி நம்பிக்கை மோசடி செய்ததாக இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலாம் எதிரி கடைசித் தவணையில் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன்மூலம் மாஜிஸ்திரேட் முன் சரண் புகுந்ததால் மாஜிஸ்திரேட் அவரை இருநூறு ரூபாய் பிணையில்செல்ல அனுமதித்தார்.

வழக்காளிதரப்பில் புறக்டர் ஆர். விசுவநாதனும் எதிரிகள்நால்வர்தரப்பிலும் புறக்டர் தளையசிங்கம் யோகநாதனும் ஆஜராயிருந்தார்கள்.

மேல்விசாரணை இம்மாதம் 29-ந் திகதி ஒத்திவைக்கப்பட்டது.


**கடைசி 4 தினங்கள் மட்டும்**

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவம் (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ன் (பண்டாரவளை) வெலிங்டன் ([illegible])
தீபொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
**பணம் படைத்தவன்**

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி நடித்த
**எங்கவீட்டுப்பிள்ளை**

**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண விஜயமும் காண்பிக்கப் படும

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர்.—விஜயகுமாரி நடித்த
**பூம்புகார்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**YOUNG LIPS**
(Adults only)

REGAL—JAFFNA
NOW SHOWING
Jessica Tandy
in
THE BIRDS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எஃகு ஆலை குறித்து உறுதி கூறமுடியாது"

## நிதி வசதி இல்லை என்று பிரதமர் இந்திரா விளக்கம்

### "நான்காவதுதிட்டம் மறுபரிசீலனை செய்யப்படும்"

புதுடில்லி, நவ. 5

ராஜ்யத்தின் எந்தப் பகுதியிலும் எஃகு ஆலை அமைப்பது குறித்து இப்பொழுது நிச்சயமாக வாக்களிக்கமுடியாது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று லோகசபையில் தெரிவித்தார். எஃகு ஆலை நிறுவுவதற்கு நிதி உதவி இல்லாததே இதற்கு முக்கிய காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இதை பற்றி நேற்று லோக சபையில் விளக்கமாக எடுத்துரைத்தார்.

"ராஜ்யங்களின் முன்னேற்றத்தையே நாம் பெரிதும் விரும்புகின்றோம். இதற்கு நாம் எந்த வகையிலும் முட்டுக்கட்டையாக இருக்கமாட்டோம். ஆனால் நெருக்கடியான நேரத்தில் புதிய திட்டங்களை மேற்கொண்டு நாடு மேலும் மோசமான நிலையை அடைவதைத் தவிர்க்கவேண்டும். இந்தியாவின் ஒவ்வொரு ராஜ்யமும் முன்னேறவேண்டும். இதற்கு ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் முக்கிய திட்டங்கள் இருக்கவேண்டும். ராஜ்யங்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருக்கவேண்டியது அவசியமாகும். நிதிவசதி இல்லாத காரணத்தினால் எஃகு ஆலை நிறுவும் திட்டத்தில் நாம் வாக்குறுதியளிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம். இதற்காக ராஜ்யத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது என்பது பொருளல்ல. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. ஐந்தாவது எஃகு ஆலை நிறுவப்படுவது சம்பந்தமாக பரிசீலனை செய்யும் பொருட்டு நான்காவது திட்டமும் மறுபரிசீலனை செய்யப்படவிருக்கிறது" என்று திருமதி இந்திரா காந்தி விளக்கினார்.

## ஆந்திரப் பிரதேசத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம்

### பொலிஸ் சுட்டதில் ஒருவர் மரணம்

விஜயவாடா, நவ. 5

ஆந்திர பிரதேசத்தின் சில பகுதிகளில் நேற்று மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களின் விளைவாக ஒரு மாணவர் பலியானார். பலர் காயமடைந்தனர். சிலர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எஃகு ஆலை நிறுவப்படவேண்டுமென்று கோரி இம் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

ஒரு இடத்தில் ஒயில்நிலையமொன்றில் நின்றுகொண்டிருந்த பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரின் துப்பாக்கியைக் கைப்பற்ற முயன்ற மாணவர் கும்பலின் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒரு மாணவர் கொல்லப்பட்டார். சிலர் காயமடைந்தனர்.

கரீம் நகரில் பொலிஸ் நிலையமொன்றைத் தாக்கிய மாணவர் கும்பலின் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை, தடியடிப்பிரயோகம் நடத்தியதில் சில மாணவர்கள் காயமடைந்தனர்,

நிஸாமாபாத்தில், ஆர்ப்பாட்டம் நடத்திய நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்புகைப் பிரயோகம் செய்தனர் இங்கு நேற்று ஏழு மாணவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

## மேற்கு ஜெர்மனியில் யு. கோ. எதிர்ப்பு இயக்கம்

பெல்கிரேட் நவ. 5

1962-ம் ஆண்டுக்கு முன்பும் பின்பும் மேற்கு ஜெர்மனியில் பல யுகோஸ்லேவிய அதிகாரிகளும் எழுத்தாளர்களும் தொழிலாளர்களும் கொலை செய்யப்பட்டதாக யுகோஸ்லேவிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேற்கு ஜெர்மனியில் யுகோஸ்லேவிய எதிர்ப்பு இயக்கம் இப்பொழுது உச்சக்கட்டத்தில் இயங்குகிறதென்றும் இந்த எதிர்ப்பு இயக்கம் மேற்கு ஜெர்மனி எங்கும் பரவியிருப்பதால் அங்குள்ள யுகோஸ்லேவிய பிரதிநிதிகளும் தொழிலாளர்களும் பல விதமான கஷ்டங்களுக்குள்ளாகிவருகிறார்கள் என்று யுகோ. அரசாங்க குறிப்பு ஒன்று கூறுகிறது.

இப்படியான சம்பவங்களைத் தடுக்குமாறு மேற்கு ஜெர்மனியை யுகோஸ்லேவிய அரசாங்கம் பல தடவைகள் கேட்டிருந்தும் அங்கு வன்முறைச் செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக யுகோஸ்லேவியா குற்றம் சுமத்தியுள்ளது. இது சம்பந்தமாக மேற்கு ஜெர்மனிக்கு யுகோ அரசாங்கம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## பிலிப்பைன்ஸுக்கு அமெரிக்கா ஆதரவு

வாஷிங்டன், நவ 5

வியட்னும் பிரச்னைக்கு சமாதானம் காணும் முகமாக ஒரு ஆசிய மகாநாட்டை கூட்ட வேண்டுமென்ற பிலிப்பைன்ஸின் பிரேரணையை அமெரிக்கா வரவேற்றது.

"வியட்நாம் பிரச்னைக்கு சமாதான சமரசம் காணக்கூடிய எந்தவொரு பிரேரணையும் நாம் வரவேற்கிறோமென மீண்டும், மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்" என ராஜாங்க இலாகா பேச்சாளர் திரு. கார்ல் பிராச் நிருபர்களுக்கு தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் தூதர் திரு. சல்வோடோர் பி. லோப்பஸ் இதுபற்றி ஐ. நா. பொதுக் காரியதரிசி யு தாண்டுடன் செவ்வாய்கிழமையன்று ஐக்கிய நாடுகள் சபையில் பேசியதாக அறிவிக்கப்பட்டது. திரு. பார்ச் தொடர்ந்து பேசுகையில் இதுபற்றி ராஜாங்க இலாகாவிற்கு பூரண விபரங்கள் கிடைக்கவில்லை என்றார்.

## பல்கலைக்கழக துணைவேந்தர்

சென்னை, நவ. 5

அண்ணாமலைப்பல்கலைகழக துணைவேந்தராகத் தமிழ் நாட்டின் பழைய கவர்னர் சந்திராரெட்டி நியமிக்கப்பட்டிருக்கிறார். சந்திரா ரெட்டி சென்னை, ஆந்திர உயர் நீதிமன்றங்களில் தலைமை நீதிபதியாகப்பதவி வகித்துள்ளார்.

## மிகப்பெரிய விமானச்சரக்கு நிலையம்

லண்டன், நவ. 5

உலகத்திலே மிகப்பெரிய விமானச்சரக்குநிலையமொன்று லண்டனில்நிறுவப்பட்டிருக்கிறது. லண்டனின்பிரதான விமானநிலையமான ஹீத்ரோவில் இந்நிலையம் அமைக்கப்படும்.

பிரிட்டிஷ் கைத்தொழில் துறைக்கு உலகெங்கிலுமிருந்து சரக்குகளைஏற்றுமதி செய்யவும், இறக்குமதிசெய்யவும் இந்நிலையம்பெரிதும் உதவியாக இருக்கும். 10,000,000 பவுண் செலவில் உருவாகவிருக்கும் இந்நிலையம் 1969-ஆண்டில் சேவையை ஆரம்பிக்குமென எதிர் [illegible]

சென்னை புயல்

## 2000 பேர் வீடிழந்தனர்: 7 பேர் மாண்டனர்

சென்னை, நவ. 5

சென்னையில் கடந்த வியாழக்கிழமை வீசியகடும்புயலினால் மாண்டவர்கள் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது. புயலினால் வீடு இழந்த சுமார் 2000 பேர் கல்லூரிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கு தற்காலிகமாக இருப்பிட வசதிகளை அளிப்பதற்கு சென்னை முனிசிப்பல் கார்ப்பரேசன் நடவடிக்கை எடுத்துள்ளது.

சென்னை துறைமுகத்தில் நேற்று முன்தினம் பாறையொன்றுடன் மோதி இரண்டாகப் பிளந்த கப்பலிலிருந்து எட்டுப்பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இக் கப்பல் இப்பொழுது நீரில் மூழ்கிவிட்டது. கப்பலின் புகைபோக்கியும் கொடியும் மட்டுமே நீருக்குமேலே தெரிகிறது. சென்னை துறைமுகத்தின் தெற்கே தரைதட்டிய மற்றுமொரு கப்பலில் வெடிப்பு ஏற்பட்டிருப்பதாக நேற்றுமாலை அறிவிக்கப்பட்டது.

ஒருநாள் கடும் புயலினால் "ஆட்டம்" கண்ட சென்னை நகரத்தில் நிலைமை வழமையானபோதிலும் போக்குவரத்துகள், டெலிபோன் தந்தி தொடர்புகள் சேவைகளில் இன்னும் மாற்றமேற்படவில்லை. 4000-க்குமதிகமான டெலிபோன் 'லைன்'கள் துண்டிக்கப்பட்டுள்ளன. ரயில் சேவைகள் தாமதமாகவே நடைபெறுகின்றன. சில பகுதிகளில் இச்சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

## அஸாமில் பாக். ஊடுருவல்?

ஷில்லாங், நவ. 5

அஸாம் ராஜ்யத்துக்குள் பாகிஸ்தானியர் புதிதாக ஊடுருவல் செய்திருப்பதாக அஸாம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊடுருவல் செய்திருக்கும் பாகிஸ்தானியரைக் கண்டுபிடிப்பதில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்றும் சிலர் கண்டுபிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக அஸாம் அரசாங்கம் வெளியிட்டுள்ள குறிப்பொன்றில் ஊடுருவல் செய்துள்ள பாகிஸ்தானியரைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐம்பது ரூபா முதல் ஐநூறு ரூபா வரை பரிசுகள் வழங்கப்படுமென்றும் பாகிஸ்தானியருக்கு தஞ்சம் அளிப்பது சட்டவிரோதமென்றும் தெரிவித்துள்ளது.

## மாணவர்கள் காவல்

ஐதராபாத், நவ. 5

உஸ்மானியா சர்வகலாசாலைக்கு புதியதுணைவேந்தர் நியமிக்கப்பட்டதைஎதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர் அவர் சர்வகலாசாலைக்குள் நுழையமுடியாதபடி காவல் செய்துவருகின்றனர். ஆந்திராநிதி மந்திரி சென்னா ரெட்டியின்காரை புதிய துணைவேந்தரின் காரென எண்ணி மாணவர்கள் தாக்கினர். அதனால் காருக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மந்திரியின்காரெனப் பிறகு தெரியவந்ததும் அதைபோக அனுமதியளித்தார்கள்.

## மல்லியில் கலப்படமா?

பண்டத்தரிப்பு, சனி

இங்குள்ள சில கடைகளில் மல்லியில் பருப்பு, பயறு என்பன கலந்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரிகிறது.

ஸிரிய - இஸ்ரேல் எல்லைத் தகராறு

## ஐ.நா.பந்தோபஸ்துசபைதீர்மானம் "வீட்டோ" அதிகாரத்தினால் ரஷ்யா ரத்துச் செய்தது

(ஐ. நா.) நியூயோர்க், நவ. 5

ஸிரியா — இஸ்ரேல் எல்லைத் தகராறு சம்பந்தமான ஐ. நா. பந்தோபஸ்துசபையின் தீர்மானத்தை ரஷ்யா தனது "வீட்டோ" (ரத்து) அதிகாரத்தினால் ரத்துச் செய்துள்ளது.

இஸ்ரேலுடனான எல்லையில் ஏற்படும் தகராறுகளைத் தடுப்பதற்கு ஸிரியா தனது நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டும் என்று இத்தீர்மானம் கோரியது.

இத்தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையின் ஆறு தற்காலிக உறுப்பு நாடுகள் தாக்கல் செய்திருந்தன.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட ரஷ்யப் பிரதிநிதி பேசுகையில் ஐ. நா. பந்தோபஸ்து சபையின் இத்தீர்மானம் இஸ்ரேல்மீதே குற்றத்தைச் சுமத்துவதாகவிருக்கிறது என்று கூறினார்.

இதற்கிடையே ஸிரிய — இஸ்ரேல் எல்லையில் மீண்டும் தகராறுகள் ஏற்பட்டிருப்பதாக ஐ. நா. வில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஏற்பட்ட இத்தகராறில் இரு தரப்பினரும் சுமார் ஒரு மணி நேரம் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## குற்றத்தடுப்பு துறையில் பயின்றுவரும் தமிழர்

லண்டன், நவ. 5

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. எம். ஜெயரத்தினம் தற்சமயம் பிரிட்டனில் குற்றத்தடுப்புத் துறையில் உயர்கல்விபெற்று வருகிறார். உதவி அரசாங்க ரசாயனப் பரிசோதகரான திரு. ஜெயரத்தினம் 'ஸ்ரத்கிளைட்' சர்வகலாசாலையில் ஒருவருடகாலத்திற்கு முழுநேரப் பயிற்சிபெறுவார்.

குற்றத்தடுப்பு சம்பந்தமான மருத்துவவிஞ்ஞானத்தில் எம். ஏ. பட்ட வகுப்புகளை இந்தச் சர்வகலாசாலை ஆரம்பித்திருக்கிறது. நவீன ஆய்வுகூடமுறைகளை அனுஷ்டித்துகுற்றத்தடுப்புத்துறையில் நிபுணர்களைப்பயிற்றுவிப்பதற்காகவே இந்த விசேஷ வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன இவைகளுக்கு பட்சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்தபல நிபுணர்கள் இவ்வகுப்புகளில்பங்குபற்றி வருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அன்பும் உண்மையும் ஒரு நாணயத்தின் இரு புறங்களாக இருக்கின்றன. உண்மையினாலும் அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றிகொள்ள முடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELAMADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELAMADU Jaffna Telephone 519

ஈழப்பத்தாம் பராபவ ஆண்டு ஐப்பசி 21 (6-11-66)

## வேலைநிறுத்தம்

கொழும்பில் வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் வேலை நிறுத்தம் நீடிக்கிறது முதலாளிமார் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் ஸ்தாபனங்களில் கடமையாற்றும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தவர்களே இப்பொழுது வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர். இது நீடிக்குமானால், இதர ஸ்தாபனங்களிலும் கூட்டுத் தாபனங்களிலும் கடமையாற்றும் வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த 21,000 ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்கலாம். வேலைநிறுத்தம் சுலபமான விஷயமல்ல பேச்சுவார்த்தை முயற்சிகள் இனிப் பயன்தரமாட்டாவென நன்கு முடிவானபின் கடைசி ஆயுதமாக இதை உபயோகிக்கவேண்டும்.

வர்த்தக சிப்பந்திகள் வேலைநிறுத்தம் விரைவில் முடிவடைவதற்கான அறிகுறிகள் தோன்றவில்லை. வேலைநிறுத்தம் ஆரம்பமாகி ஐந்து தினங்களுக்குள் பல லட்சரூபா நஷ்டமேற்பட்டுள்ளது. துறைமுக நிலைமையால் எழுபது லட்சம் ரூபாய் தேயிலை ஏற்றுமதி செய்யப்படாமல் தேங்கியுள்ளது. தேயிலை, ரப்பர் ஏலமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது ஏற்கனவே வெளிநாடுகளில் இலங்கைத் தேயிலையின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு பொருளாதாரத்தைப் பாதித்துள்ளது. செயற்கை ரப்பரால் இலங்கை ரப்பருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த வேலைநிறுத்தம் நீடிப்பது நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும்.

பொருளாதாரம் பாதிக்கப்பட்டால் இன்று வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள் உட்பட நாட்டுமக்கள் அனைவருமே பாதிக்கப்படுவார்கள். ஏற்கனவே வாழ்க்கைச் செலவு உயர்வால் கஷ்டமுறும் மக்கள் மேலும் கஷ்டமடைவர். தங்களது சம்பள விகிதம் புதுப்பிக்கப்பட வேண்டும், வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தே சிப்பந்திகள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். அவர்கள் கோரிக்கையில் நியாயமில்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டால் சம்பள உயர்வு கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியுமா? வேலைநிறுத்தத்தினால் அரசாங்கமும் முதலாளிகளும் மட்டுமல்ல தொழிலாளர்களும் பொதுமக்களுமே அதிகம் பாதிக்கப்படுவர்.

வேலை நிறுத்தத்தை ஒத்திவைக்கவேண்டுமென்ற பிரதமரின் யோசனையை "போதிய அவகாசமில்லை" எனக் கூறி வர்த்தக சிப்பந்திகள் சங்கம் நிராகரித்துவிட்டபோதிலும் பேச்சுவார்த்தைக்குத் தயார் எனத்தெரிவித்துள்ளது. நாட்டின் நலனைக்கருதி இருதரப்பினரும் விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இல்லையேல் இதில் தாமதம் செய்யாது அரசாங்கம் தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். வாழ்க்கைச் செலவுப் பளுவை இனியும் தாங்கக்கூடிய நிலையில் இந்நாட்டு மக்கள் இல்லை என்பதை அரசாங்கமும் மற்றையோரும் உணரவேண்டும்.

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி

இலங்கையில் விளையாட்டுத்துறை - உடற்பயிற்சியை விருத்தி செய்வதற்கு தனிப்பிரிவு ஒன்று அமைக்கவேண்டுமென்ற தமது முயற்சிக்கு, நிதிப்பற்றுக்குறையைக் காரணம் காட்டி திறைசேரியினர் முட்டுக்கட்டை போடுவதாக தேசியமயச் சேவை, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கே பணமில்லாதபோது விளையாட்டுக்காகப் பணத்தைச் செலவிடுவதா என்று திறைசேரி கேட்கிறது. இதில் ஓரளவு நியாயமிருந்தாலும், நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் வலுவுள்ள சமுதாயம் அவசியம். உடற்பயிற்சியினால் மனிதனின் உடல் மட்டுமல்ல உள்ளமும் வலுப்பெறுகின்றது. விளையாட்டு பல்வேறு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. இலங்கையில் இன்று மிகமிக அவசியமானது தேசிய ஒற்றுமை. கடந்த காலங்களில் தமிழ் யூனியன், ஐரோப்பிய விளையாட்டுக் கழகம், சிங்கள விளையாட்டுக்கழகம், சோனகர் விளையாட்டுச் சங்கம் என இன, வகுப்பு ரீதியில் விளையாட்டுக் கழகங்கள் அமைக்கப்பட்டன. இவை அந்தந்த வகுப்பினர் தாமாகச்சேர்ந்து அமைத்துக்கொண்ட கழகங்களும் சங்கங்களுமேயாகும். இன்றும் விளையாட்டுத் துறையில் இலங்கை முன்னேற்றம் அடையவில்லை. இலங்கையுடன் விடுதலையடைந்த நாடுகள்கூட விளையாட்டுத்துறையில் முன்னேற்றம் அடைந்துள்ளன. இதற்கு அந்தந்த நாடுகள் விளையாட்டுத் துறைக்கெனத் தனி இலாகா அமைத்து உதவியும் ஊக்கமும் அளிப்பதே காரணம். விளையாட்டுத் துறையினால் நாடுகள் சில பெரும்புகழ் பெற்றிருப்பதுடன் அந்நியச் செலாவணியும் சம்பாதித்துள்ளன. எனவே தேசிய ஐக்கியத்தையும் வலுவுள்ள வருங்கால சமுதாயத்தையும் உருவாக்கக்கூடியது மட்டுமல்ல இலங்கையின் புகழையும் பரப்பக்கூடிய நல்ல முயற்சிக்கு —விளையாட்டுத் துறையின் அபிவிருத்திக்கு திறைசேரி [illegible]

## நாட்டிலும் நகரிலும்

'அண்ணி' என்ற பெயருடன் ஒரு தமிழ் திங்கள் ஏடு நீர்கொழும்பிலிருந்து வெளிப்படப்போவதாக ஒரு முன்னோடி துண்டுப்பிரசுரம் தெரிவித்ததைக் கண்டு, சாதாரண முகமன் கூறும் மகிழ்ச்சியைவிட, ஒரு விசேஷ மகிழ்ச்சி அடைந்தேன்.

நீர்கொழும்பில் பெரும்பான்மையான தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்பது சிலருக்குத் தெரியாத விஷயமாயிருக்கலாம். அவர்கள் எல்லோரும் சிங்களவர்களே என்பது ஆச்சரியத்தை உண்டுபண்ணும். அவர்களை 'கரையோரச் சிங்களவர்' என்ற பட்டிக்குள் வாக்காளர் பட்டியல்கள் வைத்திருக்கக்கூடும். அவர்களுடைய பெயர்கள் பெரேரா, சில்வா, கொரியா என்ற சிங்களப் பெயர்கள்போல ஒலிக்கக்கூடும். (அந்தோனி, பரிஞந்து, பேதுறு போன்ற பெயர்களும் அவர்களிடத்தில் காணப்படும் இவை இலங்கையின் கரையோரப் பகுதிகள் எங்குமே காணப்படும் பெயர்கள்.) ஆனால் அவர்கள் தங்கள் வீடுகளில் பெரும்பாலும் தமிழையே பேசிக்கொள்வார்கள். சிங்களம் தெரியாத ஒருவர் நீர்கொழும்புக்குப் போக அஞ்ச வேண்டியதில்லை. அவர்கள் முதலில் சிங்களத்தில்தான் பேசுவார்கள். சிங்களம் தெரியாதென்று கண்டவுடன் "சிங்களம் தெரியாதா? அப்படியானால் தமிழிலேயே பேசுவோமே" என்று அசல் இலக்கணத் தமிழில் ஆரம்பித்துவிடுவார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு நீர்கொழும்பிலுள்ள ஒரு சிங்கள ஆசிரியருடன் தங்க வேண்டிவந்தது. அவர் பெயர் பெரேரா. சிங்களவரைப்போலச் சாரமும், கோட்டும் அணிந்திருந்தார் வீட்டிலே அவர் தமது பிள்ளைகளுடன் தமிழில் உரையாடியபோது எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

## நிகும்பலை தான் — நீர்கொழும்பா?

கொழும்பிலிருந்து ஆகப் பதினேழு மைல் தூரத்திலுள்ள நீர்கொழும்பில் தமிழ்பேசும் தொல்குடிமக்கள் வசிக்கிறார்கள் என்பதை நினைக்க இனந்தெரியாத ஓர் இன்ப உணர்ச்சி ஏற்படுகின்றது. நீர்கொழும்பில் மட்டுமல்ல, அங்கு தொடக்கம் சிலாபம். புத்தளம், மன்னார்வரை கரையோரப் பகுதிகளில் ஏராளமான தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அங்குள்ள கிராமப் பெயர்கள் பல அழகான தமிழ்ப்பெயர்களாகும். சிலாபத்திலிருந்து சுமார் பதினான்கு மைல் தூரத்தில் கரையோரமாக 'உடப்பு' என்றொரு கிராமம் இருக்கிறது. (இலங்கைப் படத்தில் அது 'உடப்புவ' என்று போடப்பட்டிருப்பது சகஜம் தானே! புளியங்குளம் சில காலத்துக்கு முன் 'புளியங்குளம' என்றிருந்ததுபோல.) இங்குள்ள மக்கள் நூற்றுக்கு நூறு தமிழராவர். வருடந்தோறும் அங்குள்ள திரௌபதை அம்மன்கோவிலில் மகாபாரதப் படிப்பும் ஈற்றில் தீக்குளிப்பும் நடைபெற்றுவருகிறது.

நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளில் இப்பொழுது வாழும் தமிழ்பேசும் மக்கள் அங்கே வந்தேறு குடிகளாகப் போன தமிழர்கள் என்பது உண்மை. காலப்போக்கில் அவர்கள் சிங்களவர்களுடன் கலந்து தங்கள் தனித்தன்மையை இழந்துபோனது மிகவும் கவலைக்கிடமானது.

தமிழ்த் தொடர்பையும், தமிழ் வாசனையையும் அவர்கள் அறவே மறந்துபோகாமல் இருப்பதற்கு 'அண்ணி' போன்ற தமிழ் சஞ்சிகைகள் பெரிதும் உதவியாயிருக்கும். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் கூட்டம்கூட்டமாக எல்லா மாவட்டங்களிலும் வசிக்கிறார்கள். ஒவ்வோரிடத்திலும் அவர்கள் பேசும் தமிழ், கலாசாரம், வழக்கவழக்கங்கள் எல்லாம் சற்றே வேறுபட்டிருக்கின்றன. அவ்விடங்களில் ஒவ்வோர் பத்திரிகை வெளிப்பட்டு அங்கு வாழும் தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்குமானால் அவற்றின் மூலம் தமிழரின் ஒற்றுமையை வளர்த்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய துண்டுப்பிரசுரத்தில் நீர்கொழும்பு தான், இலங்கை வேந்தன் இராவணனுடைய மைந்தன் இந்திரஜித்தன் இராமாயண காலத்தில் யாகம் செய்த 'நிகும்பலை' என்று கூறுகிறார்கள். ஆஹா! எத்தகைய இனிய தமிழ்ப் பெயர்; எத்தகைய அபூர்வமான தொடர்பு! நிகும்பலை தான் நீர்கொழும்பாக மாறியதா? நினைக்க நினைக்க இனிக்கிறது

மலையாளத்து 'சம்பான்' கள் எனப்படும் தோணிகள் வந்திறங்கியதால் தான் அம்பாந்தோட்டை என்ற பெயர் வந்ததென்று சிலர் கூறுகிறார்கள்: சிங்களத்தில் 'ஸ'வும் 'ஹ'வும் ஒன்று: ஸம்பாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை, அம்பாந்தோட்டையாகியது. இலங்கையின் கரையோரப் பட்டினங்களின் பெயர்களைப் பார்த்தால் அவை கடற்றொழிலோடு சம்பந்தப்பட்டிருப்பதைக் காணலாம். சிலாபம் என்ற பெயர் முத்துச் சலாபத்திலிருந்து வந்தது. நீர்கொழும்பை சிங்களத்தில் 'மீகமுவா' என்று அழைப்பார்கள். மீகாமனுக்கும் இதற்கும் தொடர்புண்டா? அல்லது நீர்கொழும்பு இராவணன் காலத்து நிகும்பலை தானா?

—வழிப்போக்கன்

## ஆதீனத்தில் திருமுறைத் திருமணம்

"கணவன் முறையால் என் மனையாளுடன் மனமொத்து உள்ளன்பு பூண்டு, என் உடல், பொருள், ஆவி மூன்றிலும் கடமைப்பட்டு வாழ்க்கடவேன்"

கம்பீரமாக நின்ற அந்த வாலிபன் புனிதமான மனத்துடன் தன் தாய்த்தமிழில் இப்படிக் கூறினான். நாணி எட்ட நின்ற அழகிய பெண் கணவனுக்குக் கிட்ட வந்தாள். அவளும் "மனைவி முறையால், என் கணவருடன் மனமொத்து உள்ளன்பு பூண்டு எனது உடல் பொருள் ஆவி மூன்றிலும் கடமைப்பட்டு வாழக்கடவேன்" என்று சத்தியம் செய்தாள் தெய்வத்தின் சார்பில் அங்கு ஒளி வீசிய அக்கினி அச்சத்தியத்தை வாங்கியது. அச்சத்தியம் எல்லோருடைய காதுகளிலும் ஒலித்தது. மெய் சிலிர்க்க வைத்தது.

ஒரு வைபவத்தின் மொழி நமக்கு விளங்கும்போது இந்த மந்திரத்தின் பாரம்பரியம் நம்முடையதாக இருக்கும்போது, அந்த வைபவம் எவ்வளவு அர்த்தமுள்ளதாக இருக்கின்றது.

இத்தகைய ஓர் அர்த்தம் நிறைந்த, தமிழ்த் திருமணம் - திருமுறைத் திருமணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 31-10-66ல் இரவு 9 மணியளவில் நடைபெற்றது. தமிழோடு இசை பாடும் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் தமிழோடு மந்திரம் ஓதி திருமணத்தை நடாத்தி மணமக்களை ஆசீர்வதித்தார்.

தமிழகத் தெய்வ விக்கிரகங்கள், திருஞானசம்பந்தர் திருவுருவப்படம், நிறைகுடம், குத்துவிளக்குகள், மலர்கள்....மலர்கள். அந்த கோவில் அறை நிறைய மின்சார விளக்குகள்.

மணமகன் தனபால். ஓர் இளம் எழுத்தாளன் முற்போக்கான சிந்தனை உள்ளவன். போர் வீரனுடைய தோற்றம். கைகூப்பி நின்றான்.

"ஐந்து கரத்தனை
யானைமுகத்தனை
இந்தினிளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை
ஞானக் கொழுந்தினைப்
புத்தியில் வைத்தடி
போற்றுகின்றேன்"

என்ற வணக்கப்பாடல் பின்னணியில் பாடப்பட மணமகள் தவமணியும், மணிப்புரிச் சந்தனக் [illegible] ஒதுக்கிவிட்டுக் கைகூப்பினாள். தாய்மார் கைகூப்பிக் கும்பிட்டனர்: பெரியோர்கள் பிள்ளைகள் எல்லோருமே கை கூப்பினர். அதன் பின்பு ஆக அரை மணி நேரம்.

சுவாமி மணமக்களுக்கு திருநீறு வழங்கினார். அந்த வேளையில் சுவாமிகளின் பிரதம சிஷ்யன் கணேசசுந்தரத்தின் தேவாரம் பின்னணியில் காற்றில் மிதந்தது.

"மந்திரமாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு
துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு
சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை
பங்கன் திருவால
வாயன் திருநீறே"

என்ற பாடல் பாடத் திருநீறு மணமக்கள் பெற்றனர்.

மக்கள் தங்கள் பெற்றோர்களை வழிபட்டனர். மணமகள் தந்தையார் வெற்றிலை பாக்கை ஒரு தட்டில் ஏந்தியவாறு மணமகன் தந்தையிடம் "உங்கள் அருமை மகன் தனபாலசிங்கத்திற்கு எனது அருமை மகள் தவமணியை வாழ்க்கைத் துணைவியாக அளிக்கிறேன்" என்று கூறினார். மணமகன் தந்தையார் அதை ஏற்றுக்கொண்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கதிர்காம பட்டின வேலைகள்

## அடுத்த வருடம் ஆரம்பமாகின்றன

கொழும்பு, சனி

புதிய கதிர்காமப் பட்டினத்தின் புதிய சந்தை, குடியிருப்புப் பகுதிகளுக்கான திட்டங்களை, அரசாங்கப் பட்டின திட்டமமைப்பாளர் பூர்த்தி செய்துவிட்டார். 1968-ல் கட்டட வேலைகள் முடிவுறும் புதிய பட்டினத்துக்கென அரசாங்கம் ரூ. 50 லட்சம் செலவழிக்கும்.

அடுத்த வருட முற்பகுதியில் மின்சார இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் புனித நகரப் பகுதியிலுள்ள சந்தையிலிருந்து ஒரு பகுதியின் இடமாற்றம் அடுத்த மே மாதத்தில் ஆரம்பமாகும்.

தேசிய வீடமைப்பு இலாகா 25 கடைகளைக்கட்டி முடித்துவிட்டது. தற்போது புனித நகர்ப் பகுதியில் கடைகள் வைத்திருப்போருக்கு இப்புதிய கடைகள் கொடுக்கப்படும். புனித நகர்ப்பகுதியில் குடியிருப்போருக்கு வீடுகட்டப் புதிய பட்டினத்தில்காணி கொடுக்கப்படும்.

புனிதநகர்ப்பகுதியிலுள்ள முழுச்சந்தையும், குடியிருப்புப்பகுதியும் மாணிக்க கங்கைக்கு அப்பால் புதிய பட்டினத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

புதிய கதிர்காமப் பட்டினத்திலுள்ளோருக்கும் சேவையளிக்கும் வகையில் கதிர்காம ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்படும்.

# "இளைஞர்களின் ஆக்கவளர்ச்சியில் திருப்பம் ஏற்பட்டுள்ளது"

திருநெல்வேலி, சனி

கடந்த நூற்றாண்டுகளில் இருந்து வந்ததிலும்பார்க்க இந்த நூற்றாண்டில்தான் இளைஞர்களது ஆக்க பூர்வமான வளர்ச்சி முக்கியமானதொரு கட்டத்தைப் பெற்றிருக்கின்றது. ஐ. நா. வருடாவருடம் கொண்டாடும் உலகச்சிறுவர்தினம் உலகிலுள்ள சகலபகுதி மக்களையும் சர்வதேச சிறுவர்களது நலனுக்காக உழைப்பதற்கான ஊக்கமளிக்கக்கூடிய ஒரு பெருநாளாகவும் அமைகின்றது."

மேற்கண்டவாறு நேற்று மாலை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற திருநெல்வேலிவடக்குமொன்டிசோரி பாடசாலையின் பெற்றோர் தின சர்வதேச சிறுவர்தின விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். ஈ. புள்ளைநாயகம் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு யாழ்ப்பாணம் சமூக சேவைப் பகுதி நிர்வாக உதவியாளர் திரு. என். சிவசிதம்பரம் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியை செல்வமணி பொன்னையா ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

திரு. புள்ளைநாயகம் மேலும் பேசுகையில் சிறுவர்கள்பாலியப்பருவத்திலே பழகுவதற்குதகுதியான இடங்கள் பாலர்பாடசாலைகள்தான் என்று கூறினர்.

திருநெல்வேலி கிராம சேவையாளர் திரு. தா. சிவபாதசுந்தரம் பேசுகையில், இளம் குற்றவாளிகள் எண்ணிக்கை குறையவேண்டுமானால் அரசாங்க சீர்திருத்த பாடசாலைகள் அதிகம் தேவையோடு, உளநூல் ஆசிரியர்களும் தேவையாகும்" என்றார்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், திரு. க. செல்வரத்தினம் ஆகியோரும் பேசினர். கொக்குவில் கலாபவன மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

## "நாய்களைப்போல சுடுகிறார்கள்"

புதுடில்லி, நவ. 5

'நாய்களைச் சுட்டுத் தள்ளுவதுபோல மாணவர்களைச் சுட்டுத்தள்ளி இருக்கிறார்கள். அதுபற்றி இந்தச்சபையில் விவாதம் நடைபெறவில்லை. ஆனால் உறுப்பினர்களை மட்டும் வெளியேற்றுகிறார்கள் இது நியாயமா?' என்று புதுடில்லி சட்ட சபையில் வலதுசாரி கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஹோமிதாஜி கேட்டார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

சென்ற வியாழக் கிழமையில் இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
22 R 0861 - ரூ. 100,000

2-வது பரிசு
3? O 0473 - ரூ. 40,000

3-வது பரிசு
30 P 0268 - ரூ. 10,000

தலா ரூபா 539.60 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 18 P 0652 | 14 C 0031 |
| 30 Y 0681 | 13 Y 0559 |
| 18 L 0315 | 37 K 0583 |
| 14 L 0921 | 14 N 0746 |
| 27 Y 0859 | 41 C 0590 |
| 09 H 0467 | 16 B 0021 |
| 01 E 0669 | 35 V 0633 |
| 24 K 0415 | 18 U 0723 |
| 03 X 0872 | 15 S 0998 |
| 29 G 0739 | 04 E 0484 |
| 21 G 0474 | 33 T 0853 |
| 02 U 0084 | 16 R 0571 |
| 27 B 0008 | 27 O 0132 |
| 21 Q 0220 | 01 Y 0618 |
| 32 H 0565 | 13 T 0427 |
| 09 P 0501 | 27 Z 0988 |
| 05 J 0638 | 38 L 0362 |
| 33 B 0126 | 16 B 0824 |
| 39 O 0750 | 12 Y 0832 |
| 19 E 0570 | 28 U 0574 |
| 40 J 03 9 | 41 Q 0689 |
| 24 F 0931 | 10 J 0115 |
| 11 S 0?56 | 04 V 0866 |
| 03 A 0362 | 26 M 0111 |
| 35 F 0746 | 08 P 0654 |
| 35 R 0067 | 01 W 0571 |
| 23 W 0234 | 08 U 0030 |
| 13 O 0707 | 27 E 0651 |
| 25 Q 0971 | 35 P 0571 |
| 14 G 0926 | 30 G 0896 |
| 24 D 0176 | 17 G 0747 |
| 07 P 0622 | 08 C 0742 |
| 30 Z 0626 | 04 Y 0214 |
| 24 B 0036 | 05 P 0296 |
| 23 J 0587 | 04 E 0307 |
| 27 B 0875 | 20 T 0881 |
| 33 F 0108 | 11 D 0577 |
| 11 H 0411 | 24 K 0260 |
| 27 H 0951 | 15 J 0413 |
| 04 G 0377 | 39 D 0391 |
| 20 U 0118 | 21 C 0033 |
| 10 U 0004 | 36 M 0612 |
| 04 C 0160 | 35 D 0848 |
| 31 G 0457 | 41 P 0459 |
| 13 S 0765 | 07 T 0137 |
| 11 E 0546 | 06 F 0753 |
| 33 T 0724 | 06 R 0035 |
| 17 C 0987 | 32 F 0489 |
| 30 Q 0547 | 02 O 02?9 |
| 27 P 0181 | 30 F 03?3 |

## அனுமதி கிடைத்தது

புதுடில்லி, நவ. 5

புதுடில்லி அரசாங்கம் 22 காரட்டில் நகைசெய்ய அனுமதியளி[illegible] உடனடியாக [illegible] வந்துவிட்டது.

தீவுப்பகுதி

## மோட்டார் வள்ள சேவைகலைக்கப்பட்டது

அனலைதீவு, சனி

கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தீவுப்பகுதி மோட்டார்வள்ள ஐக்கிய சங்கத்தினரால்நடாத்தப்பட்டுவந்த மோட்டார் வள்ளச்சேவை கூட்டுறவு ஆணையாளரின் வேண்டுகோளுக் கிணங்கக் கலைக்கப்பட்டுள்ளது.

புதிய நடவடிக்கையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பிரயாணக் கஷ்டங்கள் குறித்து கூட்டுறவு ஆணையாளருக்கு பொதுமக்கள் அறிவித்ததைத்தொடர்ந்து மூன்றுமாதகாலத்திற்கு திரு. வி. சுப்பிரமணியம்பொறுப்பில்விடப்பட்டுள்ளது.

## வேலை நிறுத்த பயமுறுத்தல்

திருநெல்வேலி சனி

தங்களின் கோரிக்கைகளை வழங்காவிட்டால் வேலை நிறுத்தத்தில் இறங்குவதென்று யாழ்ப்பாணம் மாநகர சபை மின்சார ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

தேசிய ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த இந்த மின்சார ஊழியர்கள் பல கோரிக்கைகளை மாநகரசபை ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்

தங்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான பதில் கிடைக்கா விட்டால் இவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்குவார்கள் எனத் தெரிய வருகிறது.

## விளையாட்டு டைரக்டரின் யாழ். விஜயம்

திருநெல்வேலி, சனி

இலங்கை விளையாட்டுப் பகுதி டைரக்டரான திரு. எச் ஈ குணவர்த்தன நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்திருந்தார்.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர்களான திருவாளர்களான ஹட்சன் செல்வராசா, எஸ். சி. மாணிக்கவாசகர், எஸ். நடேசன் ஆகியோரைச் சந்தித்து யாழ்ப்பாணம் விளையாட்டரங்கு சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்திய திரு. எச் ஈ குணவர்த்தன நேற்றைய தினம் கிறேடியத்தில் பரமேஸ்வராகல்லூரிக்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியையும் பார்வையிட்டார்.

## அதிகாரிகள் பொறுப்பாவார்

கொழும்பு, சனி

உள்ளூராட்சி மன்றங்களினால் கட்டப்பட்ட பல வீடுகள், மின்சாரம், குழாய் இணைப்புகள் இணைக்கப் படாத காரணத்தால், பல வருடங்களாகக் குடியிருப்பாளருக்குக் கொடுக்கப் படாமல் இருந்து வருகின்றன. இது பலத்த நிதி வருவாய் இழப்பினைஏற்படுத்தியுள்ளது.

இனிமேல் இத்தகையவருவாய் இழப்பு அரசாங்கத்துக்கு ஏற்படும் பட்சத்தில், அதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகளிடமிருந்தே அப்பணத்தை அறவிடுவதென உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

## வருடாந்த விழா

கொத்மலை, சனி

கொத்மலை— சலங்கந்தை தோட்டத்தில் இறிந்தவ தேவாலய வருடாந்தவிழா சிறப்பாக கொண்டாடப் பட்டது. இவ் வைவத்தில் கண்டி பிஷப் வண. லியோ நாணயக்காரா, நாவலப்பிட்டிய கட்டளைக்குரு [illegible] போர் [illegible] விழாவை [illegible] நடத்தினர்.

# ஆசிரியருக்கு கடிதங்கள்

## உதவித்தொகைகுறைந்ததுஏன்?

இந்துசமய அபிவிருத்திக்கு கலாச்சாரப் பகுதியினரால்இவ்வாண்டிற்கு20,000 ரூபா வழங்கப்பட்டதை யிட்டு சமீகாலை பட்டின சபைத்தலைவர் ஆட்சேபம் தெரிவித்தது வரவேற்கத் தக்க விஷயமாகும்.

1957-ம் ஆண்டில் இதற்காக 97,500 ரூபாவும் இவ்வாண்டிற்கு 20,000 ரூபாவும் வழங்கப்பட்டது என்ன ரீதியில் என்பது தெரியவில்லை. திடீரென இந்துசமயத்தவர்கள் வேறுமதத்திற்கு மாறிவிட்டார்களா அல்லது வேறு நாட்டிற்குச் சென்றுவிட்டார்களா என்று எண்ணவேண்டியிருக்கின்றது.

கல்விஅமைச்சின்கீழ்இலங்கும் கலாசாரப் பகுதியில் அதிபராக இருக்கும் திரு. லீல் குணசேகரா இவ்விஷயத்தைகவனத்திற்கொண்டு இந்து சமயத்தவர்களும் இந்நாட்டின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்கள் என்ற கோதாவில் பாகுபாடின்றிச் சிறந்த முறையில் இந்துசமய அபிவிருத்திக்கு மான்யம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்து சங்கங்களும் மற்றும் சமயப் பணியாற்றும் பெரியார்களும் இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுபோன்ற கைங்கரியங்களில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நன்மை பயக்கும்.

சைவ இளைஞன்
யாழ்ப்பாணம்.

❀ ❀ ❀

## பரம்பரை விருத்தியாகட்டும்

கண்டியிலுள்ள 'லக்ஸல' என்ற அரசாங்க கடையில் சேலைகள் கண்காட்சியை திறந்துவைத்துப் பேசுகையில் 'பெண்கள் உடுக்கும் சேலைகள் கண்காட்சியை திறந்துவைக்கும்படி என்னை ஏன் கேட்டுக் கொண்டார்களோ தெரியவில்லை. இனி யாவதுஎப்படியும் விரைவில் ஓர் இல்லத் துணைவியைப் பெற்றுக்கொள்ள முயல்வேன்' என்று பிரதமர்டட்லி சேனநாயகா கூறினாராம்.

டட்லி ஒரு பிரமச்சாரி என்பது எல்லோரும் அறிந்ததே. அந்தப் பட்டத்தை அவர்விரைவில் துறந்து இருகஸ்தன் ஆவர்என்றுநானும் விரும்புகிறேன்.

மந்திரிசபையில் இன்னொருபிரமச்சாரிஇருக்கிறார் டாக்டர் தஹநாயகா. இவர்கள் இருவரும் இலங்கையின் முன்னணித்தலைவர்கள்; ஆற்றல் மிக்கவர்கள். இவர்களுடைய சந்ததி இவர்களோடு அற்றுப் போவதைக்காண எம்மனம் சகிக்கவில்லை. ஆகையால் இந்தமாலைப் பொழுதிலாவது அவர்கள் தங்களுக்கென வாழ்க்கைத் துணைகளை தெரிந்தெடுத்து சந்தான விருத்திசெய்து கொள்வார்கள் என்றுதிடமாக நம்புகிறேன்.

கே. கமலவேணி
நல்லூர்

## மீன்சந்தை

மன்னார், சனி

மன்னார் மீன்பிடி இலாகாவின் மீன்சந்தையை மன்னார் அரசாங்க அதிபர் திரு. நேசையா திறந்து வைத்தார். குறைந்த விலைக்குக் கிரமான மீன் விற்பனை செய்ய ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

## திராட்சைக்குகிராக்கி

பண்டத்தரிப்பு, சனி

இப்பகுதிகளில் விளைந்த திராட்சைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

## ஆதீனத்தில்...

(4-பக்கத் தொடர்ச்சி)

"அம்மையே அப்பா
ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த
ஆரமுதே..."

என்ற திருவாசகம் பாடப்பட்டது. இதன் பின்பு மணமக்கள் சத்தியம் செய்தனர். (8-ம் பக்கம் பார்க்க)

"ஒளிவளர் விளக்கே
உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர்
உணர்வே!
தெளிவளர் பளிங்கின்
திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும்
தேனே!
........................"

பாடல் பாடப்பட்டது. சாம்பிராணி நறுமணம் தந்தது. சுவாமிகள் திருமங்கல நாணைக்கையில் எடுத்து மணமகனிடம் நீட்டினார். மணமகள் முகத்தில் நாணம் ஏறியது. ஒரு நொடிப்பொழுதில் அவள்கழுத்தில் அந்த நாண் ஏறியது. இருந்தபடியே பெரியோர்கள் பூமாரி சொரிந்து வாழ்த்தினர். சுவாமிகள்,

'மண்ணில் நல்லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு
யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே'

என்ற திருமுறைபாடி வாழ்த்தினார்கள்.

மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டு வலம் வந்தனர். திகிலை அலல தமிழ் மந்திரம் ஒலித்தது.

"வேயுறு தோளிபங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி..."

என்ற கோளறு பதிகம் பாடப்பட்டது. தம்பதிகள் கடவுள் வழிபாடு செய்தனர். பின்பு சுவாமிகளை வணங்கினர்.

தேவாரம் ஒலித்துக்கொண்டிருந்தது.

"வான்முறை வழாதுபெய்க
மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க
குறைவிலாது உயிர்கள்
வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

கலியாணம் முடிந்தபின்பும் தேவாரம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

எத்தனையோ எத்தனையோ கலியாணங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இதைப்போல் அர்த்தம் உள்ளதைக் காணவில்லை. தமிழுக்கு அதன் மந்திரத்திற்கு அத்தகைய வலிமை. தாய்மொழி தாலாட்டுக்கு மட்டுமல்ல, திருமணத்திற்கும் சிறந்தது என்பதை உணர்கிறோம்.

புதுத் தம்பதிகள் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் பதிவேட்டில் கையெழுத்திட்டனர். நான், இந்த முதல் கலியாணத்தில் பங்கு கொண்ட பெருமையுடன், தம்பதிகளை வாழ்த்தி, இப்படியான ஆதீனத்திருமணங்கள் மேலும் நடைபெற வேண்டும் என மனத்திற்குள் வேண்டிக்கொண்டு, எனது பெயரைப் பொறித்தேன்.

—'நந்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையும் பண்பும் ஒருங்கே கொண்டவர்

## வித்துவான் முத்துக்குமாரனுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

"நமது முன்னவர்கள் திறமையைமட்டும் பார்க்க வில்லை. பண்பையும் பார்த்தார்கள். அவர்களின் கல்வி சிறப்புற்றிருந்தது. இத்தகைய திறமையும் பண்பும் ஒருங்கே சேர்ந்த ஆசிரியராக விளங்குகின்ற திரு. பொன். முத்துக்குமாரன் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பகுதியில் சிறப்பான சேவை செய்வாரென எதிர்பார்க்கின்றோம்."

இவ்வாறு நேற்றுக்காலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் திரு. பொன். முத்துக்குமாரன் பல்கலைக்கழக விரிவுரையாளராக நியமனம் பெற்றதைப் பாராட்டுமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறினார்.

இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிய வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் கூறியதாவது:-

தென்னிந்தியாவிலே பாரம்பரிய தமிழ்க்கல்வியிலே சிறந்த தமிழ் அறிஞர்கள் பல்கலைக்கழக பேராசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையினை ஈழநாட்டில் உருவாக்க வேண்டுமென்பது எமது அவாவாக இருந்துவந்துள்ளது. விபுலானந்த அடிகளாரோடும் திரு. நடேசனுடனும் நான் இதுபற்றி கருத்து வெளியிட்டிருந்தேன். அக்காலத்தில் நடைபெறாதது இப்போது செயல்படுவதைக் காண மிக்க பெருமையடைகின்றோம்."

திரு. கனக செந்திநாதன் பேசுகையில், முத்துப் போன்ற பண்டிதராக விளங்கும் திரு. முத்துக்குமாரன் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது நம்நாட்டவர் பெருமையடையத்தக்க ஆக்கபூர்வமான இலக்கியத்தைச் செய்யவேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

திரு. ஹரன் பேசுகையில், திரு. முத்துக்குமாரனின் நல்லசேவையைப் பாராட்டி பல்கலைக்கழகத்தில் எதிர்காலச் செல்வங்களான மாணவர்களை நல்வழிப்படுத்த அவர் சேவை புரியவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

திரு. சிவராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. சபாரத்தினம், திரு. நமசிவாயம், திரு ஆசீர்வாதம் ஜே. பி. ஆகியோரும் திரு. முத்துக்குமாரனின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

திரு. பொன். முத்துக்குமாரன் நன்றிதெரிவித்துப் பேசுகையில், இறைவனின் அருளையும், நல்லோரின் தொடர்பும் தான் தம்மை நல்வழியில் நடத்திவந்திருக்கிறது என்று கூறினர்.

முன்னாள் யாழ்ப்பாண உதவிமேயர் திரு. சோ. இராசரத்தினம் திரு. முத்துக்குமாரனுக்கு அன்பளிப்பும் பொருள்களை வழங்கினர்.

கம்பன் கழக சார்பில் வாழ்த்துப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. (ந. தி)

## தீபாவளிக்கு ஜவுளி

சங்கானை, சனி

வலி-மேற்கு கூட்டுறவு சமாசத்தினர் பலரகமான துணிகளை வருவித்துள்ளனர். தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு இந்த

## ஜவுளி கிடைக்க வசதிகள்

காரைநகர், சனி

காரைநகரிலுள்ள கூட்டுறவு நிலையங்களில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டுக் கூப்பன் மூலம் ஜவுளி விநியோக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்துவருகின்றனர். இதனால் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய சிரமம் இல்லாது உள்ளூர் கூட்டுறவு நிலையங்களிலேயே பெறக் கூடிய வசதியேற்பட்டுள்ளது.




## வீதியின் சீர்கேடு

யாழ்ப்பாணம், சனி

நீண்டகாலமாக பழுதடைந்திருக்கும் காரைநகர் தோப்புக்காடு கடற்கரையை அடுத்த நடைபாதையை திருத்தும் வேலைகள் நடைபெற்ற போதிலும் வீதி முழுவதும் இன்னும் திருத்தப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வரும் காலி தெரிவுக் கோஷ்டி

திருநெல்வேலி, ஞாயிறு

இம்மாதம் 10ந் தேதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் காலி மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டியான காலி மத்திய மகாவித்தியாலயக் கல்லூரி உதைபந்தாட்டக்குழுவினர் 10ந் தேதியும், 11ந் தேதியும் இரண்டு போட்டிகளில் பங்குகொள்ள இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'ஏ-1' டிவிஷன் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினருடன் 10ந் தேதியும், 'ஏ-2' டிவிஷன் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ் இந்துக் கல்லூரியினருடன் 11ந் தேதியும் இவர்கள் 'மோது'வார்கள்

வெள்ள நிவாரண நிதிக்காக யாழ்ப்பாணம் ஸ்டேடியத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளைக் கொழும்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ரி. பேரின்பநாயகம் ஒழுங்குசெய்துள்ளார்.

இரண்டாம் நாளன்று உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு தகநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்க இருக்கிறார்.

காலி தெரிவுக் கோஷ்டி விளையாட்டு வீரர்கள் விபரம்: கே. சத்தியபாலா (கப்டன்), ஏ. பண்டித, டி. ஜி. சந்திரபால, கே. எம சரத், டபிள்யு ஸ்டான்லி, ஏ சேனநாயக்கா, டபிள்யு. ஆரியதாச, எல். விக்கிரமரெட்ண, டபிள்யு. குமரதாச, ரி நூர், ஏ ராமநாயக்கா, என். நயீம்.

# அருணோதயா - யூனியன் 'மோதல்'

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்க ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாம், மூன்றும் பிரிவுகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் யூனியன் விளையாட்டரங்கில் மோதிக்கொண்டன.

முதலில் நடைபெற்ற மூன்றும் பிரிவுப்போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிக விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இப்போட்டி முடிவில் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

மூன்றும் பிரிவுப் போட்டியை அடுத்து இரண்டாம் பிரிவுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டி எதிர்பார்த்த அளவிற்கு இருக்கவில்லை.

இடைவேளை ஆரம்பமாகியதும் யார் வெற்றி பெறுவார்கள் என்று முடிவு செய்ய முடியாத அளவிற்கு ஆட்டம் உச்சநிலையை அடைந்தது. இருகோஷ்டியினரும் மாறிமாறித் தாக்கியபடி இருந்தனர். இரு கல்லூரி கோல்காப்பாளர்களின் திறமை மிகப் பாராட்டிற்குரியது. இறுதி நேரத்தில் ஆட்டம் முடிவதற்கு எட்டு நிமிடங்களுக்கு முன்னதாக அருணோதயாக் கல்லூரியினர் ஒரு கோலை அடித்து 2-1 கோல்களால் வெற்றியீட்டினர்.

மூன்றும் பிரிவுப் போட்டிக்கு திரு. ரி. பி. பத்மநாதனும் இரண்டாம் பிரிவுப் போட்டிக்கு திரு. கே. தேவராசாவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

# சென். பற்றிக்ஸின் சிறப்பான விளையாட்டு

திருநெல்வேலி, சனி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியினருக்கும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான முதலாம் இரண்டாம் கோஷ்டிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டிலும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கோஷ்டியினரே வெற்றியீட்டிக் கொண்டனர்.

முதலாம் பிரிவுக்கான போட்டி தொடங்கி சில நிமிட நேரங்களில் பற்றிக்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த சந்தியாகோ மின்னல் வேகத்தில் முதலாவது கோலை போட்டார். அதனைத் தொடர்ந்து பல கோல்களைப் போடஎத்தனித்தும் சென். ஹென்றிஸ் கோஷ்டி கோல்காப்பாளர் விரனின் லோஸிடன் சிறப்பான விளையாட்டினால் தடுக்கப்பட்டன. இடைவேளையின்போது கோல்களின் எண்ணிக்கை 1—0 ஆக இருந்தது. இடைவேளைக்குப் பிறகு மீண்டும் சந்தியாகோ இரண்டாவது கோலைப்போட்டு கோல்களின் எண்ணிக்கையை இரண்டாக்கினார். அடுத்து பற்றிக்ஸ் முன்னணி வீரர் வெற்றிவேலு மூன்றாவது கோலையும் போட்டதைத் தொடர்ந்து சென். ஹென்றிஸ் கோஷ்டியின் இடது உள் முன்னணி வீரர் ஒரு கோலைப் போட்டதால் கோல்களின் எண்ணிக்கை 3—1 ஆகியது இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு அணியினருக்கும் ஒவ்வொரு 'பெனல்டி' சந்தர்ப்பம் கிடைத்தும் அவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தவில்லை.

பற்றிக்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த ஒஸ்வால்ட் ஜோசப் ஆகியோர் கடைசிநேரத்தில் இரண்டு கோல்கள் போட்டனர். இப்போட்டியில் சென். பற்றிக்ஸ் 5—1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு சந். சிவகராசா மத்தியஸ்தம் வகித்தார்.

இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் சுலபமாக 6—1 கோல்களால் வெற்றியீட்டிக் கொண்டது. இப்போட்டிக்கு திரு. ஜெயபாலன் சவரிமுத்து மத்தியஸ்தம் வகித்தார்.

# சென் ஜோசப் வெற்றி

திருகோணமலை, சனி

திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப்போட்டிகளில் 19 வயது ஏ. பிரிவுக்கான போட்டியில் திருமலை சிங்கள மகாவித்தியாலயமும் சென். ஜோசப் கல்லூரியும் மோதிக்கொண்டன.

அடுத்தடுத்து ஐந்து கோல்களை சென். யோசப் கல்லூரி வீரர்கள் புகுத்தியதும் எதிரணியினர் விளையாட்டில் தமது தோல்வியை ஏற்றுக்கொண்டதுபோல ... மாகக்காணப்பட்டனர். முடிவில் ஐந்துமேலதிக கோல்களைப்புகுத்தி சென். ஜோசப் கல்லூரியினர் வெற்றியீட்டினர். திரு. ... மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# ஸ்கந்தா வெற்றி

சுன்னாகம், சனி

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயக்கல்லூரி 4—0 கோல்களால் வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களுள் ஸ்கந்தவரோதயக்கல்லூரிக்கு ஒரு 'பெனல்டி' கிடைத்தது. அதை ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த க. கான்தாசன் மின்னல் வேகத்தில் அடித்தார் இதைத்தொடர்ந்து விளையாட்டு விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

இடைவேளையின் போது கோல் எண்ணிக்கை 2—0 இருந்தது. இடைவேளையின் பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரி உற்சாகமாக விளையாடியபோதும் ஸ்கந்தவரோதய பின்னணி வீரர்களான இராஜநாயகம், தம்பிஐயாவினதும் அவர்களின் சிறப்பான விளையாட்டினால் பந்து தடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ஸ்கந்தவரோதய வலது வெளிப்புற வீரர் மகேந்திரன் ஒரு கோலை அடித்தார் ஆட்டம் முடிய இரண்டு நிமிடம் இருக்கையில் இடது வெளிப்புற வீரர் புஷ்பராஜா மேலும் ஒரு கோலை அடித்தார் இறுதியில் ஸ்கந்தா 4—0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. சண்முகரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

## விளையாட்டுக்கழகம்

பருத்தித்துறை, சனி

புலோலி கிழக்கு 'வளாமதி' விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தீபாவளி விளையாட்டுவிழாவை இம்முறையும் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## பாடசாலையை திருத்த வேண்டுகோள்

சுழிபுரம், சனி

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலையின் அவசிய தேவைகளை உடன் பூர்த்தி செய்துதருமாறு பாடசாலை தலைமையாசிரியர் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் சங்கக்கோஷ்டியினர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தை கோரியுள்ளனர் மழைகாலத்தில் பாடசாலையை நடத்த முடியாத நிலைமையையும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

## சர்வதேச சிறுவர்தின விழா

திருநெல்வேலி, சனி

திருநெல்வேலி வடக்கு மொண்டிசோரி பாடசாலை பெற்றோர் தினவிழாவும் சர்வதேச சிறுவர் தின விழாவும் நேற்று இரவு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் சமூகசேவை நிர்வாக உதவியாளர் திரு. என். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். இ. புள்ளைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

## தட்டுப்பாடு

பண்டத்தரிப்பு, சனி


இப்பகுதிகளில் பால்மா உணவுவகைகள், உருளைக்கிழங்கு, மல்லி, மிளகாய் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

# விளையாட்டுத்துறைக்கு ஓர் இழப்பு

திரு. வி. ரி. மகாலிங்கத்தின் திடீர்மறைவு, விளையாட்டுத்துறைக்கு ஒரு பெரும் இழப்பென்றே கூறலாம.

பிரபல விளையாட்டு வீரரும் இலங்கை ''சாம்பியனு''மான சப்இன்ஸ்பெக்டா திரு. வி. ரி மகாலிங்கம், கடந்தவியாழக்கிழமை அதிகாலை கோர விபத்தில் மரணமானார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொலிஸ் படையில் சேர்ந்து கடைசியாக மருதானை பொலிஸ்நிலையத்தில் சப் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. மகாலிங்கம் விளையாட்டுத்துறையில் ஒரு ''ஆல்ரவுண்டர்'' என்று சொல்லலாம்.

தனது ஆரம்பகால படிப்பை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்தொடங்கியபொழுதே அவர் கீழ்ப்பிரிவில் சகல விளையாட்டுப் போட்டிகளிலும் சாம்பியனாக வந்திருந்தார். இதன் பின்னர் அவர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் கல்விபயின்றார். 1959-ல் கீழ்ப்பிரிவு உதைபந்தாட்டப்போட்டிக்கு தலைமை தாங்கினார் இவர். 1961-ல் உடற்பயிற்சிப் போட்டியில் சாம்பியனானார். 1962-ல் மத்தியகல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்குத் தலைமைதாங்கினார் இவர் காட்டிய திறமையினால்யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் கோஷ்டிக்கு ''காப்டனா''னார். 1961-ல், இவர் யாழ் உதைபந்தாட்டக் கோஷ்டியிலும் சேர்ந்து பல போட்டிகளில் விளையாடினார்.



1964, 65-ல் நீளம்பாய்தலில் தேசிய சாம்பியனை திரு. மகாலிங்கம் 1961, 62-ல் நீளம்பாய்தல், உயரம் பாய்தல் ஆகியவற்றில் பாடசாலைகள் சாம்பியனாகவுமிருந்தார் மத்திய கல்லூரியில் படிக்கும் பொழுது இவர் பல விளையாட்டுப்போட்டிகளில் கல்லூரி சார்பாக பங்கெடுத்து பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தார். விளையாட்டு காட்டுவதுபோல் கல்வியிலும் அதிக சிரத்தை காட்டியதுடன் சிரேஷ்ட ''பிறிபெக்''டாகவுமிருந்தார் 1963-ல் நடைபெற்ற கொழும்பு பாடசாலைகள்—யாழ் பாடசாலைகள் கிரிக்கெட் போட்டியில் இவர் எழுபது ஓட்டங்களை எடுத்ததை ரசிகர்கள் இலேசில் மறக்கமுடியாது.

குறிப்பாக சொல்வதென்றால் விளையாட்டுத்துறையில் இவர்ஈடுபடாதபோட்டிகளே இருக்கவில்லை. இவரது மறைவு இலங்கையின் விளையாட்டுத்துறைக்கு பெருநஷ்டமாகும்.

—மகான்

மலயுத்தப போட்டிகள்

# திருகோணமலை இந்துக்கல்லூரி சாம்பியனானது

திருகோணமலை, சனி

திருகோணமலை மாவட்ட பாடசாலைகளுக்கிடையே முதன்முறையாக நடைபெற்ற மலயுத்தப்போட்டியில் இந்துக்கல்லூரி ஆறு அதிகப்படியான புள்ளிகளினால் சாம்பியனானது. இப்போட்டிகளில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சிங்கள மகாவித்தியாலயம், கஞ்சிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்பனவும் கலந்துகொண்டன. பதினொரு பிரிவாக நடைபெற்ற இப்போட்டிகளில் ஒன்பது பிரிவில் இந்துக்கல்லூரியும், மூன்றுபிரிவில் சிங்கள மகாவித்தியாலயமும், இரண்டு பிரிவில் கஞ்சிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் வெற்றியீட்டின. போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

(40-45 ராத்தல்): கே. செல்வம், (45-50 ராத்தல்): எஸ் லிங்கராசா. (50 ராத்தல்): ரி. ஜெயசீலன், (55-60 ராத்தல்): ஜே. கபீர். (60-67 1/2 ராத்தல்): ஜி. ரஞ்சித்குமார், (67 1/2-75 1/2 ராத்தல்): ஆர். பத்மகரன், (75-82 ராத்தல்): எஸ் ஹரிதரன், (82-90 ராத்தல்) ஆர். பிரபாகரன், (90-95 ராத்தல்): கே பி உபசேன, (95-102 ராத்தல்): ஏ ஜி. கே சிறிவர்த்தன, (102-108 ராத்தல்): என். சண்முகராஜா, (108-114 1/2- 1/2 ராத்தல்) கே வி ஜயராஜா, (114 1/2-125 1/2 ராத்தல்) ஏ. அருணகுமார். (125 1/2-138 1/2 ராத்தல்): ரி. டபிள்யு. ரி. லயனல்.

இப்போட்டிகளை திருகோணமலை மாவட்டக் கல்விப்பகுதியின் உடற்பயிற்சி இன்ஸ்பெக்டர் திரு. ஏ. டி பி. ஜேசுதாசன் ஒழுங்கு செய்திருந்தார்.

## தெரு வேலைக்கு சிறுவரை அமர்த்தல்

கொழும்பு, சனி

பலகாரம் விற்பவர்கள், சுவீப் டிக்கெட், பத்திரிகைகள் விற்பவர்கள் எனத் தெரு உத்தியோகங்களில் 14 வயதுக்குட்பட்டவர்களை சினிமாத்துறை, மற்றும் தெரு வியாபாரத்துறைகளில் உள்ளோர் ஈடுபடுத்துவது பெண்கள், இளைஞர், குழந்தைகளை வேலைக்கமர்த்தல் சட்டத்தின் கீழ் குற்றமாகும்

இத்துறைகளில் சிறுவர், சிறுமியரை வேலைக்கமர்த்துவோர் அனைவர்மீதும் நடவடிக்கை எடுக்கத் தொழில் இலாகா தீர்மானித்துள்ளது.

## சாரதிகளுக்குத் தொல்லை

பண்டத்தரிப்பு, சனி

மாதகல், சேந்தான்குளம் ஆகிய சந்திகளில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் வழிகாட்டிக்கம்பங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் இடங்களின் குறிப்புகள்சாரதிகளுக்குத் தெளிவாக இல்லையாம். இதனால் சிலசாரதிகள் பஸ்ஸை கம்பங்களின் அருகே நிறுத்தியேகுறிப்பைப்பார்க்கின்றார்கள்.

## நிலவரி

சென்னை, நவ. 5

நிலவரியை ரத்துச்செய்வதுபற்றி பரிசீலனைசெய்ய தமிழ்நாடு அரசாங்கம் ஒரு தனி அதிகாரியை நியமித்துள்ளது. அந்த அதிகாரியின் அறிக்கை கிடைத்தபின் நிலவரி ரத்து பற்றிய சட்டம் அடுத்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் பக்தவத்சலம் தமிழ்நாடு சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிமடைத் தேர்தல்

# அப்பீல் மனு நிராகரிப்பு

கொழும்பு, சனி
வெளிமடைத் தொகுதியில் திரு. பேர்ஸி சமரவீராவின் பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல்செய்யப்பட்ட மனுவை தேர்தல் நீதிபதி ஏற்றுக்கொண்டதை ஆட்சேபித்து திரு. பேர்ஸி சமரவீரா தாக்கல்செய்த அப்பீல் மனு மூன்று நீதிபதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் வெளிமடைத் தொகுதியில் திரு. பேர்ஸி சமரவீரா வெற்றி பெற்றிருந்ததை ஆட்சேபித்து தாக்கல்செய்யப்பட்ட மனு முன்னர் தேர்தல் நீதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரது தெரிவு செல்லுபடியாகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பை ஆட்சேபித்து திரு. பேர்ஸி சமரவீரா அப்பீல் செய்திருந்தார். பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ, திரு. எஸ். டபிள்யூ. தம்பையா, திரு. சிறிமானே ஆகியோர் இதனை விசாரணை செய்தபின்னர் மனுவைச் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்துள்ளனர்.

## பாலில் கலப்படம் செய்ததாக வழக்கு

திருநெல்வேலி, ஞாயிறு
கொழுப்புச்சத்துக் குறைந்த பாலை விற்பனை செய்ததாக யாழ்ப்பாணம் மாநகரசபையினரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கொன்று நேற்றையதினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. வீ. ஜே. ராஜரட்ணம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் கலட்டி சீனியர் ஒழுங்கையைச்சேர்ந்த எம். கே. முருகேசு விற்பனைசெய்த பாலில் பதினேழு வீதம் கொழுப்புச்சத்துக் குறைந்திருந்ததாக யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதாரப்பகுதியினரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிதரப்பு வழக்கறிஞரான தனயசிங்கம் யோகநாதன் சரியானமுறையில் எதிரிக்குக் கட்டளை கொடுக்கப்படவில்லை என்பதை மாஜிஸ்திரேட்டின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து மேல் விசாரணையை மாஜிஸ்திரேட் இம்மாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 300 ரூபா அபராதம்

மானிப்பாய், சனி
"சட்டவிரோதமாக வடிசாராயம் வடிக்கவும் வேண்டும். பிடிபட்டால் குற்றமும் கட்டமுடியாதென்றால் சிறைக்குத்தான் செல்லவேண்டும்" என்று சட்டவிரோதமாகச் சாராயம் வடித்த ஒருவரைப் பார்த்து மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா கூறினார்.

இவ்வழக்கில் உரும்பராயைச் சேர்ந்த சவரிமுத்து இன்னாசிமுத்துவும், அவரது மனைவியும் 7 டிரம் வடிசாராயம் வைத்திருந்ததாகச் சுன்னாகம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இன்னாசிமுத்து குற்றத்தை ஒப்புக்கொள்ளவே பொலிஸார் அவரது மனைவிக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டை வாபஸ் பெற்றனர். இதனைத் தொடர்ந்து நீதிபதி இன்னாசிமுத்தை 300 ரூபாய் அபராதம் செலுத்தும்படியும், அபராதம் செலுத்தத் தவறினால் நாலரை மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

## மீன்பிடி இயந்திரப் படகுகள்

கொழும்பு, சனி
நீண்டகாலக் கடன் திட்டத்தில் கூட்டுறவு மீன்பிடிச் சங்கங்களுக்குக் கொடுத்துதவுவதென 150 மீன்பிடி இயந்திரப்படகுகளைத் தருவிக்க மீன்பிடிக் கூட்டுத் தாபனம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்த இயந்திரப்படகுகள் இயங்க ஆரம்பித்ததும் தற்போது வருடத்தில் பிடிக்கப்படும் 15 லட்சம் தொன்மீன் 30 லட்சமாக இரட்டிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைரயில்வேக்கு டீசல் எஞ்சின்

கொழும்பு, சனி
ஒன்பது நாடுகளிலுள்ள ரயில் எஞ்ஜின் தயாரிப்பாளர்கள் இலங்கை ரயில்வேக்கு டீசல் எஞ்ஜின்கள் அளிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் (டெண்டர்கள்) சமர்ப்பித்துள்ளன.

அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், அவுஸ்திரேலியா ஆகியவையே அந்த ஒன்பது நாடுகளாகும்.

## விசேஷ வழிபாடு

பண்டத்தரிப்பு, சனி
ஆத்துமக்களின் திருநாளையொட்டி இங்கு பல தேவாலயங்களிலும் மக்கள் கல்லறைகளுக்குச்சென்று விசேஷ வழிபாடு நடாத்தினர். இம்மாதம் முழுவதும் ஆலயங்களில் துக்கமணி ஒலிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.


கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

தங்கள் தறிகளில் உற்பத்தியாகும் எந்த விதமான ஜவுளிகளையும், பெறுமதியான விலைகளில் எம்மிடம் விற்பனைசெய்யலாம். தொடர்புகொள்க.

**S. R. S.**
**ஜவுளிமாளிகை**
சி. இ. செல்லத்துரை
216, K. K. S வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296


## வேப்புசரும் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரத்தை வட்டமிடத் தொடங்கிவிட்டனராம்.

இந்த மரத்திலிருந்து 26 போத்தல்களில் 'பால்' கிடைத்தபொழுதிலும் இன்னும் கிடைக்காதா என்று பலர் இம்மரத்தை வட்டமிட்டுள்ளனர். 'பாலை' அருந்திய பலர் அங்கு இன்ப மயக்கத்தில் கிடக்கின்றனர்.

# வான் சாரதி நியமனப் பிரச்னை

### யாழ். தபால் ஊழியர் வேலை நிறுத்தம் செய்யலாம்

திருநெல்வேலி, ஞாயிறு
யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் காலியான வான் சாரதி ஒருவரின் ஸ்தானத்தை நிரப்புவது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருப்பதாக அறியப்படுகிறது.

அண்மையில் ஓய்வுபெற்ற யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் வான் சாரதியான பொன்னுத்துரையின் காலி ஸ்தானத்தை நிரப்ப சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்தப் பிரச்சினை உருவாகியுள்ளதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத் தபாற் கந்தோரில் பல அனுபவம் வாய்ந்த வான் சாரதிகள் இருக்கும்போது வேறொருவரைத் தெரிவு செய்தது குறித்து யாழ்ப்பாணம் தபால் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பதைடவைகள் எடுத்துச் சொல்லியும் இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் இதுபற்றி பூரண நடவடிக்கை எடுக்கப்படாவிடில் யாழ்ப்பாணம் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வார்கள் எனவும் தெரியவருகின்றது.

இதுவிஷயமாக யாழ்ப்பாண தபால் ஊழியர்சங்கக் காரியதரிசி கொழும்பிலுள்ள தலைமைச் சங்கத்துக்கு அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் இப் பிரச்னையில் உடனடியாகக் கவனமெடுத்து சுமுகமான முடிவைக்காணும்படி சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தாலும் தற்காலிக தந்தி ஊழியர்கள் வேலைக்குச் செல்வார்கள் எனவும் தெரிகின்றது.

# மாஜிஸ்திரேட் 'பெஞ்ச்' வாரண்ட்: நீதிமன்றத்தில் எதிரி கைது

திருநெல்வேலி, சனி
ஜீவனாம்ச வழக்கொன்றில் எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஒருவர் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்ற வாசலில் வைத்து, நீதிமன்றத்திலிருந்தே மாஜிஸ்திரேட் பிறப்பித்த "பெஞ்ச்" வாரண்டைத் தொடர்ந்து நீதிமன்ற சார்ஜன்ட் கே. அரிநேசரட்ணத்தால் கைது செய்யப்பட்ட சம்பவம் இன்று நிகழ்ந்தது.

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தேவசாமி ஐயர் என அழைக்கப்படும் இரத்தின ஐயர் சென்ற தவணைக்கு நீதிமன்றத்துக்கு வராமையினால் மாஜிஸ்திரேட் திரு. வீ. ஜே. ராஜரத்தினத்தால் அவர் மீது "பெஞ்ச்" வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இன்று அவர் தனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்துக்கு வந்தபோதிலும் அவரைப் பொலிஸார் கைது செய்து மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தனர். இதனை ஆட்சேபித்து எதிரியின் வழக்கறிஞரும் புறக்டரும் மாஜிஸ்திரேட்டிடம் முறைப்பாடு செய்தபோதிலும் மாஜிஸ்திரேட் நீதிமன்ற பொலிஸ் சார்ஜன்ட் செய்தது சரியே என்றும் சட்டத்தின் முன் எல்லோரும் சரியே எனவும் கூறி எதிரியை 100 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

# இராணுவத்தாக்குதல் வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

சாவகச்சேரி, சனி
இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த என். டி. பெர்னாண்டோ, கே. பி. சமரசிங்கா, ரி. எல். சிடீன், டபிள்யூ. கே. றூபசிங்கா ஆகிய நாலு ராணுவ வீரரும் 1964-ம் ஆண்டு ஜூலை 5-ம் திகதி தாளையடியில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி கிருஷ்ணன், ராசநாயகம் உட்படச் சிலருக்கு அடித்துக்காயம் விளைவித்ததாக நாலு குற்றச்சாட்டின் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று காலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. வி. எப். குமாரசுவாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முதலாம் எதிரியாகிய என். டி. பெர்னாண்டோ சுகயீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றத்திற்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து நீதிபதி விசாரணையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் திரு. சி. பாலகிருஷ்ணனும் வழக்காளி தரப்பில் திரு. என். கே. திரவியநாயகமும் ஆஜரானார்கள்.

## பட்டினசபையைக் கலைக்கவேண்டுமாம்

### அங்கத்தவர்பிரேரணை

மானிப்பாய், சனி
காங்கேசன்துறை பட்டினசபையில் ஊழல் நிலவுவதாகவும், அதுபற்றி பகிரங்க விசாரணைநடத்தி அவசியமானால் சபையைக்கலைத்து விசேஷ ஆணையாளரின் கீழ் நிர்வாகம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை காங்கேசன்துறை பட்டினசபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டுவர முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## தமிழ் - சிங்கள இசை பற்றி கருத்தரங்கு

கொழும்பு, சனி
அடுத்த வாரம் சிங்கள—தமிழ் இசை பற்றிய ஒரு கருத்தரங்கம் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. இந்தக் கருத்தரங்கில் இசை அறிஞர்களும், பிரபலஸ்தர்களும் உரைகள் நிகழ்த்தவிருக்கின்றார்கள்.

## மந்திரி தகா..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 3-30 மணிக்கு இராசமாளிகையில் மக்கள் முன்னேற்ற மன்றம், பீடி, சுருட்டு உற்பத்தியாளர் சங்கம், யாழ்ப்பாணம் மஞ்சவனம் புகையிலை விற்பனையாளர் சங்கம் ஆகியன பேட்டிகாணும். 4-30 மணிக்கு காலி மாவட்டப் பாடசாலைத் தெரிவுக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைத் தெரிவுக்கோஷ்டியினருக்குமிடையில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இரவு 7-30 மணிக்கு வண்ணார்பண்ணை நெசவு நிலையத்தைத் திறந்துவைப்பார்.

11-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7-45 க்கும் 8-30 மணிக்குமிடையில் அகில இலங்கை சைவக் கோவில்கள் முகாமையாளர்கள் சங்கம், சைவப் பிராமணகுருக்கள் சங்கம், வேதாகம சைவசித்தாந்த சபை, வட இலங்கை சுருட்டுக் கைத்தொழிலாளர் சங்கம் ஆகியன இராசமாளிகையில் மந்திரியைப் பேட்டிகாண்பர். காலை 8-30 மணிக்கு திடல்புலம் நெசவு நிலையம், வசாவிளான் நெசவு நிலையம் ஆகியனவற்றையும், 9-30 மணிக்கு ஆவரங்கால் நெசவு நிலையத்தையும், 10-45 மணிக்கு வதிரி நெசவு நிலையத்தையும், திறந்துவைப்பதோடு 11-30 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரிக்கும் விஜயம் செய்வார்.

பருத்தித்துறையில் [illegible] பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு மாலை 4 மணிக்கு சாவகச்சேரியில் இரு நெசவுநிலையங்களைத் திறந்துவைப்பார். 6 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கு கொள்ளுவார் இரவு 7-15 க்கு சாவகச்சேரி வாடிவீட்டில் யாழ்ப்பாண மாவட்ட கிராம சேவையாளர்கள் சங்கம் பேட்டி காணும். இரவு போஜனத்தை சாவகச்சேரியில் முடித்த பின்னர் 9-00 மணிக்கு நாவற்குழி நெசவு நிலையத்தைத் திறந்துவைப்பார்.

12-ம் திகதி சனிக்கிழமை காலை 7-30 க்கு மந்திரி தகநாயகா பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் திரும்புவார்.

## டபிள்டெக்கர்-கார் மோதல்

திருநெல்வேலி, ஞாயிறு
யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் சென்று கொண்டிருந்த இ. போ. ச. இரட்டைத்தட்டு பஸ் ஒன்றும், சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்து கொண்டிருந்த கார் ஒன்றும் நேற்று மாலை அரியாலையில் மோதிக் கொண்டன. இதன் விளைவாக கார்ச்சாரதியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சபாரட்ணமும் இக்காரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சிறுப்பிட்டியைச் சேர்ந்த கே. அரசரத்தினமும் காயமடைந்தார்கள். இவர்கள் பின் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## இஸ்லாமிய பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு
இமாம் ஷாபி (ரஹ்) நினைவு தினத்தை இம்மாதம் 13-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு யாழ்ப்பாணம் முஹிதீன் மஸ்ஜித் வாலிபர் சங்கம் பல மத அறிவுப் போட்டிகளை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோலிக் மேலவீதி, 63-ல் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org